- WRPC - 184

| Special Quota if any | |
|---|---|

ந. க. எண். அ3 / 006111 / 2023,
நாள்:24.05.2023.

மாவட்ட காவல் அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்.

# பணியமர்த்தல் ஆணை

பொருள் :- காவல்துறை – 2022 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை ஆண் / பெண் காவலராக மாவட்டம் / மாநகர ஆயுதப்படையில் பணியமர்த்தல் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

******

D. ARUNAISHREENEE, பதிவு எண். 6300023 ஆகிய நீவீர், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு குழுமத்தால் நடத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான காவலர் தேர்வு மற்றும் காவல் புலனாய்வு மற்றும் மருத்துவ ஆய்வு ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்டு, மாவட்ட / மாநகர ஆயுதப்படையில் இரண்டாம் நிலை ஆண் / பெண் காவலராக பணியமர்த்தம் செய்யப்படுகிறீர்கள்.

2) நீவீர், மேற்படி பதவிக்குரிய அடிப்படைப் பயிற்சிக்கு அறிக்கை செய்யும் போது கல்வி, வயது, சாதி மற்றும் பிற சான்றிதழ்களின் மூல சான்றிதழ் சம்மந்தப்பட்ட காவல் பயிற்சிப் பள்ளி முதல்வரிடம் ஒப்படைக்க வேண்டும். இந்தப் பணி நியமனத்திற்காக நீவீர் ஏற்கனவே ஒப்படைத்த சான்றுகள் தவறானவை என பின்பு தெரிய வந்தாலோ குற்ற வழக்கில் தொடர்பு இருந்தாலோ அல்லது குற்ற வழக்கு தொடர்புடைய விவரங்களை மறைத்து காவல் புலனாய்வு அறிக்கை மூலம் பின்னர் கண்டறியப்பட்டாலோ, இந்தப் பணியமர்த்தல் ஆணை உடனடியாக ரத்து செய்யப்படும் என்பதை அறியவும். மேலும் காவல் பயிற்சியின் போது உமக்கு ரூபாய் 18200 - 57900 என்ற ஊதிய நிலையில் சம்பளமும் மற்றும் நடைமுறையில் உள்ள இதர படிகளும் வழங்கப்படும்.

3) இந்தப் பதவியில் நீவீர் மூன்று ஆண்டு காலத் தொடர் பணியில், இரண்டு ஆண்டுக் காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவீர். இந்தத் தகுதிகாண் பருவத்தில், உமது பணி நிறைவானதாக இல்லையெனில், பணியமர்த்தல் ஆணை ரத்து செய்யப்படும்.

4) அரசு ஆணை பல்வகை எண் 206 உள் (கா.3) துறை, நாள் 07.03.2012-ன் படி நீங்கள் ஏழு மாத காலம் பயிற்சிப் பள்ளியில் உறைவிட அடிப்படைப் பயிற்சியும், ஒரு மாத காலம் மாவட்டம் / நகரத்தில் காவல் நிலைய நடைமுறைப் பயிற்சியும் ஆக மொத்தம் எட்டு மாத காலத்திற்கு அடிப்படை பயிற்சிப் பெற வேண்டும். இவை தவிர, சிறப்புக் காவல் / சேமப்படை ஆகிய பிரிவுகளில் பணிபுரிந்து வட்டக் காவல் பிரிவு மாற்றபடுவதற்கு முன் ஒரு மாத கால அறிமுகப் பயிற்சியையும் (Pre-Induction Course) காவல் பயிற்சிப் பள்ளியில் பெறவேண்டும். பயிற்சி காலத்தில் உமது நடத்தை நல்லொழுக்கம் மற்றும் பயிற்சியை

மேற்கொள்ளும் திறன் ஆகியவை மீது ஏதேனும் கவனமின்மை, பற்றாக்குறை கண்டறியப்பட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவீர்.

5) மேலும், நீவீர் காவல் பணி காரணமாக தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திலும், காவல் துறையின் எந்த அணி மற்றும் பிரிவிலும் தேவை ஏற்படின் பிற மாநிலங்களிலும், பணி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளீர் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான இசைவு கடிதம், பயிற்சியில் சேர்ந்த உடன் உம்மால் பூர்த்தி செய்யப்பட்டு பயிற்சிப் பள்ளி முதல்வரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

6) உமக்கு அடிப்படைப் பயிற்சி 01.06.2023 அன்று முற்பகல் முதல் தொடங்கப்படவுள்ளது. எனவே, இது தொடர்பாக சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் காவல் நடைமுறைகளுக்காக நீவீர் 31.05.2023 அன்று **பிற்பகல் வேலூர் காவலர் பயிற்சிப்பள்ளியில்** அறிக்கை செய்ய வேண்டும். பயிற்சிக்குரிய சீருடைகள் பயிற்சிப் பள்ளியில் உமக்கு வழங்கப்படும். குறிப்பிட்ட தேதியில் நீவீர் பயிற்சிக்கு அறிக்கை செய்யாவிடில், உமக்கு வழங்கப்படும் பணியமர்த்தல் ஆணை ரத்து செய்யப்படும் என்பதை அறியவும். நீவீர் அரசு / பொதுத்துறை / தனியார் நிறுவனத்தில் ஏற்கனவே பணியாற்றிக் கொண்டிருந்தால் அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான ஆணை அல்லது பணிவிலகல் ஏற்பு ஆணையினைப் பயிற்சிக்கு அறிக்கை செய்யும் போது அளிக்க வேண்டும்.

7) நீவீர், பயிற்சிக்கு அறிக்கை செய்யும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள பொருள்கள் மற்றும் முன்பணத் தொகை ஆகியவற்றை கொண்டுவருமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். பயிற்சியில் சேருவதற்கான பயணப்படி மற்றும் நாள்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

இணைப்பு – பயிற்சியில் சேரும்போது கொண்டு
வர வேண்டியவற்றின் விவரப்பட்டியல்.

24/5/23

காவல் கண்காணிப்பாளர்
தருமபுரி மாவட்டம்.

பெறுநர்,

6300023
D. ARUNAISHREENEE
8838804713
D/O. THARUMAN,
2/104 D, PARUVATHANAHALLI VILLAGE,
NOOLAHALLI POST,
PENNAGARAM TK,
DHARMAPURI DT.